# முருங்கனில் சிப்பாய் மரணம்; நால்வர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் பகுதியில், விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதுடன், நால்வர் காயமடைந்தனர்.

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு, இப்பகுதியில் புலிகளிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்ற

[4-ம் பக்கம் பார்க்க]


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 88 சித்திரை 4 ஷவ்வால் 1 இதழ்: 66

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-04-1991


## யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு முயற்சி

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசு முயற்சி செய்து வருகிறது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கூறினார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## சிறையிலிருந்து விடுதலையான இளைஞர்கள் கடத்தல்

(கொழும்பு)

தென்னிலங்கையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்படும் இளைஞர்கள், வீடு சென்ற சில நாட்களின் பின்னர் காணமற்

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதி படைகளுக்கு விதித்த காலக்கெடுவினுள்

# ஸ்ரீலங்கா இராணுவத்தினரை புலிகளே வெற்றிகொள்வர்

## ‘நியூஸ்வீக்’ சஞ்சிகை கருத்து

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு ஸ்ரீலங்கா படையினருக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விதித்திருந்த ஜூன் மாத காலக் கெடுவினுள் புலிகளே வெற்றி கொள்வர். இராணுவத்தினரால் வெற்றிகொள்ளமுடியாது என்று கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதாக ‘நியூஸ் வீக்’ சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜூன் மாதத்தின்பின் ஜனாதிபதி திரு. பிரேமதாசா சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளும் பெருமளவிலிருப்பதாகவும் அந்த ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மிகவும் பலமான நிலையிலிருப்பதால் இந்தக் காலத்திற்குள் அவர்களை வெல்வது என்பது இயலாத காரியமென்றும் அச் சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது? (கி)

## காணமல் போனோரை விசாரிக்க பிரஜைகள் குழு

(திருமலை)

திருமலையில் காணமல் போன தமிழர்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ளுமுகமாக ‘பிரஜைகள் குழு’ ஒன்றை இராணுவம் அமைத்துள்ளது.

இதுவரை காணமல்போனவர்கள் பற்றி எந்தவிதமானதொரு முறைப்பாடும் தமக்கு வரவில்லையென மாவட்ட இராணுவதளபதி பிரிகேடியர் சிறி பீரிஸ் கூறியுள்ளார்.

திருமலையில் இதுவரை 2,000க்கும் மேற்பட்ட தமிழர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்படவில்லை

(வாஷிங்டன்)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையில் முன்னேற்றமெதுவும் காணப்படவில்லை. வடக்கு கிழக்கில் பெருமளவு பகுதிகள் இன்னமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்று அமெரிக்க சஞ்சிகையொன்று தெரிவித்துள்ளது.

இச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கையில் வடக்கு கிழக்

[4ம் பக்கம் பார்க்க]

## 75 காஸ் சிலிண்டர்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வந்து சேர்ந்த ‘வில்லி வில்லி’ கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 75 காஸ்சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டன.

## தமிழ் குழுக்கள் மத்தியில் மீண்டும் இழுபறி நிலை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் ஏற்படவேண்டிய தீர்வு குறித்து தமிழ் குழுக்களிடையே இணக்கம் ஏற்பட்டுள்ள போதிலும் தற்போது இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

தனித்தனி இரு மாகாண சபை [தமிழ், முஸ்லிம்] அமைய வேண்டும் என்பதும் வேறுபல யோசனைகளிலும் இவை இணக்கம் கண்டிருந்தன

எனினும் தற்போது மேற்படி 5 கட்சிகளிடையேயும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## 11,000 சிங்கள இளைஞர்கள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் உள்ள சிறைக்கூடங்களில் 11 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜே. வி. பி. உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கால்நடை உற்பத்தி சுகாதாரத் துறையில் ஆரம்ப-குறுகியகால பயிற்சிகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பிக்க இருக்கின்றது.

[4-ம் பக்கம் பார்க்க]

## காரைநகர் மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரி, தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை அனுமதி அட்டை இன்றும், நாளையும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

காலை 9-00 மணி முதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழர் பிரச்னையில் ராஜீவ் தன்னிச்சைப் போக்கு

(புதுடில்லி)

இலங்கை பிரச்சனைக்கு காங்கிரசே தனித்து ஒரு தீர்வை காணவேண்டுமென திரு. ராஜீவ்காந்தி செயல்பட்டுவருவதாக காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சந்திரசேகர் பிரதமராக இருந்த காலத்தில் தமது

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு சட்டம்

[கொழும்பு]

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மர்மமான முறையில் இளம் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் மரணமடைந்த இளம் யுவதியின் சடலமொன்று பொதுமக்களினால் யாழ். போதனா

(4ம் பக்கம் பார்க்க)

## கேரதீவில் ஹெலி தாக்குதல் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி - கேரதீவு இறங்குதுறையில் பொதுமக்கள்மீது ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட 50 ஹலிபர் தாக்குதலினால் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 6-45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தி. சந்திரகுமார் (31 வயது) என்பவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

சுமார் பதினைந்து நிமிடங்கள்வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (56)

### பிரி விளம்பரம்

## இனும்

நீங்கள் சேர்த்து வைத்திருக்கும், ஜெயந்தி, துர்க்கா பத்திகளின் வெற்றுப்பக்கட்களை சேர்த்து கொடுத்துஇனும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள், அண்ணு தொழிலகம், இணுவில். (ஏ 1228)


# சைக்கிள் திருடர் வசமாக மாட்டினர்

(பண்டத்தரிப்பு)

தாம் திருடிக்கொண்டுவந்த ''ஹீரோ'' ரகப் புத்தம் புதிய சைக்கிளின் உதிரிப்பாகங்களைக் கழற்றித் தேவையற்ற உதிரிப்பாகங்களை எடுத்துப் பாழடைந்த கிணறு ஒன்றில் போட்ட வாலிபர் ஒருவர் அப்பகுதி மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பில் நிகழ்ந்துள்ளது.

மாதகலைச் சேர்ந்த இந்த வாலிபர் கொக்குவில் பகுதியில் மேற்படி சைக்கிளைத் திருடிக்கொண்டு வந்து பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் வீதியிலுள்ள சைக்கிள் கடையொன்றில் வைத்து உதிரிப்பாகங்களைக் கழற்றித்தேவையற்ற சிலவற்றைக் கொண்டுவந்து பண்டத்தரிப்புக் கேணிக்கட்டு ஒழுங்கையிலிருக்கின்ற பாவனையற்ற பாழடைந்த கிணறு ஒன்றில் போட்டதாகவும், அயலவர்கள் இந்தச் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்து இவரை விசாரித்தபோது இவர் தப்பியோட முயற்சித்ததாகவும், பின்னர் இளைஞர்கள் சிலர் இவரை மடக்கிப்பிடித்து விடுதலைப் புலிகளின் பண்டத்தரிப்புப் பிரதேச அலுவலகத்தில் ஒப்படைத்தனராம். (72)

## சமாஜம் உருவானது

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக பகுதிக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களின் மத்தியில் இணைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் சமாஜம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உடுவில் உப அலுவலக நூலகத்தில் நடைபெற்ற சமாச அங்குரார்ப்பண விழாவில் உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாண மாகாணசபை சனசமூகநிலைய சமாஜத் தலைவர் திரு. இ. தவகோபால் ஆகியோர் விசேடமாகக் கலந்துகொண்டனர். (109)

## இராசி பலன்

17-04-1991

புதன்கிழமை

திருதியை மு. இ. 8-45வரை கார்த்திகை மு.இ. 9-10வரை, இராகுகாலம் பகல் 12-04 முதல் 1-34 வரை, சுபநேரம் மாலை 4-34 முதல் 6-04 வரை, கார்த்திகை விரதம்.

மேஷம்: வேலைப்பளு, தூரத்துப்பயணம், பெரியோர் பாராட்டு.

இடபம்: ஏமாற்றம். வாழ்க்கைத்துயரம், அலைச்சல்மிகுதி

மிதுனம்: வேலையாள் சகாயம், தொழில்சிறப்பு, மகிழ்ச்சி

கடகம்: கடன் உபாதை, இனசன உதவி, அகாலபோஜனம்.

சிங்கம்: விவேகமின்மை, குடும்பக்கவலை, பணக்கஸ்டம்.

கன்னி; தகாத நட்பு தொழில் துன்பம், அதிக யோசனை.

துலாம்: குடும்ப மகிழ்ச்சி, தெய்வீக செலவு, புத்திரர் மகிழ்ச்சி.

விருச்சிகம்: காலியபலிதம், பயணங்களால் அனுகூலம், வெற்றி.

தனுசு: தொழில் கஸ்டம், பழைய பிரச்சனை, கடமை தவறுதல்.

மகரம்: வைத்தியச்செலவு, குடும்பபகை, அந்நியவாசம்.

கும்பம்: தொழில் துறை பாராட்டு, பொதுப்பணி, குடும்பசுகம்.

மீனம்: இல்லச்சிறப்பு, வாக்குக்கலகம், அநாவசிய செலவு.

ஜோஸ்யர்

## நூலகம் புதிய இடத்தில்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பளையில் இதுவரை காலமும் இயங்கிவந்த உப அலுவலக பொதுநூலகம் பாதுகாப்புக்கருதி மல்லாகம் கோவில் வீதியில் உள்ள சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையக் கட்டிடத்தில் தற்போது செயல்பட்டுவருகின்றது. (154)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியாக பதவி உயர்வுடன் இடமாற்றம்பெற்றுச் செல்லும் திரு. ந. சிவசீலனுக்கு பளை உதவி அரச அதிபர் பணிமனையில் அண்மையில் பாராட்டுவிழாவும் பிரிவுபகார விழாவும் நடாத்தப்பட்டது

பளை உதவி அரச அதிபர் உட்பட பல உத்தியோகத்தர்கள் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர். (௯)

## முதலாமிடம்

(இருபாலை)

இருபாலை சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற தமிழ்த் தினவிழாவின் கட்டுரைப்போட்டியில் பாலசுப்பிரமணியம் தனுசியாவும் பேச்சுப்போட்டியில் ச. நாகரூபாவும் அபிநயப்போட்டியில் நி. வித்தியாவும் முதலாமிடத்தைப் பெற்றனர். பாடசாலை அதிபர் திரு. வேலாயுதம் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது. (83)

# ஊழியர் பற்றுக்குறை நோயாளர் சிரமம்

[கொழும்புத்துறை]

யாழ். கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் ஊழியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் அநேகர் அசௌகரியத்திற்கும், சிரமத்திற்கும் உள்ளாகி வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் தொகை அதிகரித்து வருகின்றது. இதனால் நோயாளர்களைப் பராமரிக்க முடியாத நிலையில் ஆஸ்பத்திரி நிர்வாகம் சிரமத்திற்குள்ளாகியுள்ளது.

1983-ம் ஆண்டு இவ்வாஸ்பத்திரியில் 35 சிற்றூழியர்கள் பணியாற்றினர் தற்சமயம் 13 சிற்றூழியர்கள் மட்டுமே கடமையிலீடுபட்டிருப்பதாகவும் முன்பு இங்கு 8 தாதிகள் கடமையாற்றியதாகவும் தற்போது ஒரேயொரு தாதி மட்டும் சேவையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடபகுதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரேயொரு அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை இதுவேயாகும். இங்கு 150 படுக்கைகளைக் கொண்ட நோயாளர் வார்ட்டுக்கள் உள்ளன.

பலமுறை இவ்வைத்தியசாலையில் நிலவிவந்த ஊழியர் பற்றுக்குறை உட்படபல விடயங்கள் கொழும்பு தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொண்டும் இதுவரை இக்கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படாதுள்ளது மிகக் கவலைக்குரிய விடயம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றும் சகலதர ஊழியர்களுக்கும் கடந்த ஏழு மாதச் சம்பளம் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(நாவற்குழி)

ஆசிரியர்கள் சேவையில் இருந்தே பட்டதாரியானவர்களும் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். முன்பிருந்தது போலல்லாமல் தற்போது பட்டம் பெற்ற நாள் முதலே அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகக் கணிக்கப்படுவதால் எதிர்வரும் 19-ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள முதலாம் தர, இரண்டாம் தர அதிபர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குப் பதவியிலிருந்து பட்டம் பெற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (107)

## அறிவித்தல்

### தொழிலாளர் கல்வி அனுமதி நேர்முகப் பரீட்சை

1989/90 ஆம் கல்வி ஆண்டுக்கான தொழிலாளர் கல்விநெறிப் பயிற்சி அனுமதிநேர்முகபரீட்சை 1991-04-19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு ப. 9-00 மணிக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ளது. நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் சுட்டிலக்கங்கள் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெறுதவர்கள்1991-04-18 ஆம் திகதி வியாழக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக தேர்வுகள்கிளையில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பதிவாளர்

1991-04-15. [எ-1230]

## அறிவித்தல்

### கல்வி பட்டப்பின் டிப்ளோமா 1990/91

1990/91 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்வி பட்டப்பின் டிப்ளோமா பயிற்சிநெறி அனுமதி தேர்வுப் பரீட்சை 1991-04-21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. தகைமைகளை உடைய விண்ணப்பதாரர்களின் சொந்த முகவரிக்குத் தபாலில் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறுதவர்கள் 1991-04-19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழகத் தேர்வுகள் கிளையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

- பதிவாளர்

1991-04-15 [எ1231]

## ஓராண்டு நினைவஞ்சலி



### சு. ஆரோக்கியநாதர்

(சுன்னாகம் மின்சாரசபை)

மண்ணுலா: 1 2-1941 விண்ணுலா: 17 4-1990

குலவிளக்கே நீ அணைந்தாய்
குமுறுகிறோம் உன் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
பாழும் விதியாலே எம்மைவிட்டு
பாதியிலே சென்று விட்டீர்
மின்னலென நீர் மறைந்து
ஓராண்டு சென்றிடினும்
உம் உறவை மறப்போமா
மறக்கும் நெஞ்சுமுண்டோ

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அல்லைப்பிட்டி பிலிப்பினேரியார் ஆலயம், யாழ். ஆசனக்கோயில் ஆகிய இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்பிரிவால் துயருறும்

சகோதரிகள், மருமக்கள், எ. ஜெயமலர்:

அல்லைப்பிட்டி,
யாழ்ப்பாணம். (சி 4642)

## உத்தியோகத்தர் தெரிவு

[பூநகரி]

பூநகரி பலநோக்கு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தில் அண்மையில் நடந்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர் விபரம் வருமாறு:

தலைவர்: ச. விஜயரட்ணம், செயலாளர்: ந: இஸ்ணபவன், பொருளாளர்: ச குணரத்தினம், உப-தலைவர்; க. நெற்சிங்கம், உப-செயலாளர்: ஆ. பாலகிருஷ்ணன்; பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (23)

0 0 0

(நல்லூர்)

நல்லூர்ஸ்ரீ சட்டநாதர்ஆலய பரிபாலன சபையின் 3வது பொதுச்சபைக்கூட்டத்தில் பின்வரும் புதிய உறுப்பினர்கள் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: கு. கிட்ணர், உப தலைவர்கள்: வீ. யோகரத்தினம், வ பரமசிவம், செயலாளர்; இ சந்திரகுமார், உப செயலாளர்: க. இராசலிங்கம், பொருளாளர்: ஐ அ. பரமேஸ்வரன், உபபொருளாளர்: செ. வல்லிபுரம்.

ஒன்பதுபேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது


## ஜீவாகாரம்

பாவனையாளர்கட்கு அன்பான வேண்டுகோள். மேற்படி ஜீவாகசரம் போலிகளும் விற்பனையாவதால் நீங்கள் வாங்கும்போது உண்மையான அண்ணு "ஜீவாகாரம்" என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஏமாறுதீர்கள்;

தயாரிப்பாளர்:

அண்ணு தொழிலகம்,
இணுவில்.

(ஏ 1229)

★ இலங்கையிலிருந்து கண், சிறுநீரகம் விற்பனை

# இராணுவத்தால் கொல்லப்பட்ட சிங்களவரின் சடலங்களிலிருந்து உறுப்புக்கள் திருட்டு

## யப்பான் பத்திரிகையாளர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

ரி. சிவகணேசன்

1987ற்குப் பின் இலங்கை உள்நாட்டு குழப்பத்தினுள்ளும், இந்திய இராணுவ பிரவேசத்திற்குள்ளும் சிக்கித் தவிக்கையில் இதனைப் பயன்படுத்தி இங்கு மனித உறுப்பு வியாபாரம் பெருமளவில் நடைபெற்றுள்ளது. இதனை யப்பான் பத்திரிகையாளர் ஒருவர் அம்பலப்படுத்தியுள்ளார்.

இந்த மனித உறுப்பு வியாபாரம் பற்றி யப்பானின் துப்பறியும் பத்திரிகையாளர் திரு. அக்கியோ நாகஜீமா கொழும்பு வந்து பல தகவல்களை துப்பறிந்து அதனை கட்டுரையாக 'மைனிச்சி சிம்பன்' என்ற யப்பானிய சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

அந்தக் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு மேலும்பல தகவல்கள் கிடைத்துள்ளன.

தெற்கில் 1987ற்குப் பின் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் என அரசபடைகளால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தடுப்பு முகாம்கள், வீதியோரங்கள், விசாரணைக் கூடங்கள் ஆற்றுமேடுகள் யாவும் கொலைக்களமாக மாறின. எங்கும் மனித சடலங்கள்.

நகரிலும் கொலை, கிராமங்களிலும் கொலை, இந்தக் கொலைவெறித் தாண்டவத்தினுள் பல லட்சம், கோடிக்கணக்கான ரூபாய்க்கு சடலங்களிலிருந்து உடலுறுப்புகள் திருடப்பட்டன.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள் என சொல்லுமளவிற்கு இவை வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டன. இது கண்டு பிடிக்கப்படவில்லையா? அல்லது மேலிடத்தின் அனுசரணையுடன் நடைபெற்றதா என்பது தற்போது சர்ச்சைக்குரியதல்ல]

குறிப்பாக இவற்றைப்பெறுவதில் யப்பான் முனைப்பாக இருந்தது. சிறுநீரகமும், கண்ணுமே பெருமளவில் யப்பானுக்கு கடத்தப்பட்டன. இந்த உறுப்புகளை யப்பானில் வாங்க பெருமளவினர் போட்டிபோட்டனர்

தென்பகுதியில் பெருமளவு சிங்களவரும் வடபகுதியில் குறைந்தளவு தமிழர்களினது (கொல்லப்பட்டவர்களின்) சடலங்களிலிருந்து சிறுநீரகம் கண் மற்றும் இருதயம் உட்பட பல உறுப்புகள் பக்குவமாக அகற்றப்பட்டன.

இவை குறிப்பிட்ட ஏஜென்ஸிகள் மூலம் யப்பானுக்கு அனுப்பப்பட்டன. இதற்கென நாடுமுழுவதிலும் பல ஏஜென்ஸிகள் செயற்பட்டார்கள்.

அந்த யப்பான் நிருபர் கூறுகிறார்; கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கொழும்பு செல்லும் பாதையில் தினமும் அதிகாலையில் கண்களும், கைகள் பின்னால் கட்டப்பட்டும் உடலில் பலத்த காயங்களுடனும் முகம் எரிபட்ட நிலையிலும் 20 முதல் 40 சடலங்கள் காணப்படும்;

பெரும்பாலும் சடலங்களின் முக்கிய உறுப்புகள் அகற்றப்பட்டிருக்கும். இவை பிரேத பரிசோதனையின்போதே கண்டு பிடிக்கப்பட்டன. எனினும் அது வெளியுலகுக்கு வெளியிடப்படவில்லை அச்சம்காரணமாய் கூட அது மறைக்கப்பட்டிருக்கலாம் ஆனால் அதில் பெருமளவு உண்மையில்லை.

ஜே வி பி., புலிகளை அழிப்பதாகக் கூறியவர்கள் அப்பாவிகளை அழித்து அவர்களது உடல் உறுப்புகளைச் சேகரித்து வெளியுலகுக்கு விற்பனைசெய்துள்ளனர். இந்த வியாபாரத்துக்கு மேலிடத்தின் ஆசீர்வாதமும் இருந்தது.

இந்த வியாபாரத்துக்குப் பல பெண்கள் ஏஜென்ஸியாக செயல்பட்டனர். கல்யாணத் தரகர்கள் என்ற போர்வையில் இந்த வியாபாரம் பல இடங்களில் நடைபெற்றுள்ளது. அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் சடலங்களிலிருந்து இலவசமாக இந்த கோஷ்டிக்கு மனித உறுப்புகள் கிடைத்தன.

இது அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், உத்வேகத்தையுமளித்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் சடலங்களிலிருந்து கிடைத்தது ஆயிரக்கணக்கான உறுப்புகள். உயிருடனிருப்பவர்களிடமிருந்தும் இந்த உறுப்புகள் பெறப்பட்டுள்ளன.

ஆசை வார்த்தை கூறி மோசடி நடைபெற்றுள்ளது. குறிப்பிட்ட தொகை பணத்துக்கு தமது சிறுநீரகங்களை இழந்தவர்கள் பலர். உள்நாட்டுக் குழப்பத்தால் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு குறைந்த தொகைப் பணத்துக்கு விற்றவர்கள் பலர். இவ்வாறு யப்பானுக்கு விற்கப்பட்ட சிறுவர்கள் பலரிடமிருந்து முக்கிய உறுப்புகள் பெறப்பட்டன.

இலங்கைக்கு யப்பான் பல வழிகளிலும் உதவி வந்ததால் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வெளிநாட்டவர்கள் மீது நடாத்தப்படும் கடும் சோதனைகள் யப்பானியர்விடயத்தில் கடுமையாக இருக்கவில்லை.

இதனைப் பலர் சாதகமாய் பயன்படுத்தியிருக்கலாம். யப்பானில் தற்போது சுமார் 30 000 பேர் சிறுநீரகம் மிகவும பாதிக்கப்பட்டு மாற்று சிறுநீரகத்துக்காக காத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு ஒவ்வொரு வருடமும் 600 முதல் 700 சிறுநீரகங்களே யப்பானுக்கு சட்டபூர்வமாகக் கிடைக்கின்றது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக இலங்கைபோன்ற வறியநாடுகளிலிருந்து இவ்வாறுசிறுநீரகங்கள் பெறப்பட்டுவருகின்றன. பணத்தின்மூலம் எதனையும் சாதிக்கலாம் என நினைக்கும் யப்பானியர் மனித நேயமற்ற

(4-ம் பக்கம் பார்க்க)

## தலையில் பெயின்ற் ஊற்றி படையினர் இம்சை

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து தனது வீட்டிற்கு பூசுவதற்குபெயின்றின்கள் கொண்டுவந்த யாழ்ப்பாண வாசி ஒருவரிடமிருந்து வவுனியாவிலுள்ள படையினர் அப்பெயின்ற் றின்களை பறித்து அதனை அவரது தலையில் ஊற்றி அபிஷேகம் செய்து மகிழ்ந்தனர்.

சிலதினங்கட்கு முன்னர் இச்சம்பவம் வவுனியா தடைமுகாமில் இடம்பெற்றது. அவ்வாசி படையினரின் தாக்குதலுக்கும் இலக்காகியுள்ளார். (56)

## விலை அதிகம்

(கொழும்புத்துறை)

வவுனியா மாவட்டத்தில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் பத்து ரூபாவுக்கு விற்கப்படும் அதேவேளை அதனை அங்கு இருந்து வாங்கிவர ஒரு பிளாஸ்டிக் கலனுக்கு 75ரூபா கொடுக்கவேண்டியுள்ள தாக அங்கிருந்து வரும் மக்கள் தெரிவித்துள்ளனர். (154)

## ஜே.வி.பி. புதைத்த ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஜே. வி. பி. யினர் புதைத்து வைத்திருந்த ஆயுதங்களைப் பொலிஸார் மீட்டு வருகின்றனராம்.

பதுளை, காலி, தங்காலைப் பகுதிகளில் அண்மையில் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் காட்டுப் பகுதிகள் சிலவற்றில் ஜே. வி. பி. யினர் தொடர்ந்தும் தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## மட்டு. அகதிகளுக்கு வழங்க 9 கோடி ரூபா தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பமான இராணுவ நடவடிக்கையில் பாதிக்கப்பட்டவர்க்கு நிவாரணம் வழங்க 9 கோடி ரூபா தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

பெருமளவு மக்கள் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## உள்ளூராட்சி தேர்தல் 87 லட்சம் வாக்காளர்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தயாரிக்கும் வேலை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

86 லட்சத்து 90 ஆயிரம் பேருக்கு வாக்காளர் அட்டைகள் தயாரிக்கும் வேலைகள் யாவும் இன்னும் 15 நாட்களில் பூர்த்தியாகிவிடுமென தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் தெரிவித்தார்

## இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி 30 லட்சம் குர்திஷ் அகதிகள் மலைகளுக்கு தப்பிஓட்டம்

(பாக்தாத்)

ஈராக்கிய படைகளின் தாக்குதலுக்கு அஞ்சி சுமார் 30லட்சம் 'குர்திஷ்' இனத்தவர் வட ஈராக்கிலுள்ள மலைப்பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்

இவர்கள் உறைபனியாலும், உணவு இன்மையாலும் பெரும் கஷ்டமடைந்துவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் அரசபடைகளுக்கும் குர்திஷ் இனத்தவர்களுக்குமிடையிலான யுத்தம் பற்றி செய்திகள் சேகரித்து வந்த 15க்கும் மேற்பட்ட வெளிநாட்டு நிருபர்கள் துருக்கியினுள் தப்பி ஓடிவிட்டனர். 14 நிருபர்கள் ஈராக் எல்லையில் ஒளிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தி.மு.க.-கம்யூனிஸ்ட் தேர்தல் உடன்பாடு

(சென்னை)

தி. மு. க.- சி. பி. ஐ. எம். கட்சிகளிடையே தமிழகத்தில் தொகுதி உடன்பாடு காணப்பட்டுள்ளது

இதன்படி தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு சி. பி. ஐ. எம். இற்கு 22 தொகுதியும், லோக் சபாவிற்கு 3இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தி. மு க. வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளதாகக் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ)

## குர்திஷ் அகதிகளை திரும்புமாறு அதிபர் சதாம் அழைப்பு

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து வெளியேறும் குர்திஷ் அகதிகளை உடன் நாடு திரும்புமாறு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

வட ஈராக்கிற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட போதே இவ்வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இதேவேளையில்! ஈரானில் தஞ்சமடையும் பெரும் தொகையான குர்திஷ் அகதிகள் விடயம் தொடர்பாக உலகின் பல நாடுகளும் உதவ முன்வந்துள்ளதுடன் ஈரானில் தஞ்சமடையும் குர்திஷ் அகதிகள் விடயம் தொடர்பாக ஆராயுமுகமாக ஐ. நா. பிரமுகர் ஒருவர் ஈரான் விஜயம் செய்யவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## வேதனம், சம்பளமுற்பணம் வழங்கப்படுகிறது

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு பெப்ரவரி மாத வேதனமும், பண்டிகை முற்பணமும் அத்தோடு சேர்த்து வேலை இடைநிறுத்தல் கடிதங்களும் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சேவை மூப்பு அடிப்படையில் பகுதி பகுதியாக பெப்ரவரி மாத வேதனமும், பண்டிகை முற்பணமும், இடைநிறுத்தல் கடிதமும் வழங்கப்பட்டு வருவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். (86)

# அரசு சார்பற்ற நிறுவனங்கள் மீது தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது செயற்பட்டுவரும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மீது தீவிர கண்காணிப்பு போடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுக்கான நிதி எவ்வாறு கிடைக்கின்றது? இவற்றின் முழுமையான செயற்பாடுகள் குறித்தும் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவும் அண்மையில் உத்தரவிடப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் 70க்கும் மேற்பட்ட வெளிநாட்டு, உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனங்கள் இயங்கிவருகின்றன.

கடந்த மார்ச் மாதம் 11ந் திகதிக்குப் பின் இவை மீதான கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (சி)

# முன்னுள் பிரி பிரதமருக்கு 70,000 ரூபா ஓய்வூதியம்

(வாஷிங்டன்)

உலகின் 'இரும்புப் பெண்மணி' என வர்ணிக்கப்படும் முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சர் 7,531 டவுண் (இலங்கைப் பணத்தில் 70 ஆயிரம் ரூபா) களைத் தமது மாதாந்த ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்கிறார்.

அமெரிக்கத் தொலைக்காட்சிச் செய்தியாளர் வால்டர் யால்பராவுக்கு வழங்கிய தொலைக்காட்சிப் பேட்டியிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், தற்காலிகத் தோல்விகள் ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் போராடத் தயங்கமாட்டேன் என்றார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் இவர், ஜோன் மேயர் பிரிட்டிஷ் பிரதமரான பின்னர், தமது பிரதமர் பதவியை இழந்தவர் என்பது தெரிந்ததே. (க)

# குண்டுவீச்சிற்கு தப்பியவர் பாம்பினால் கடியுண்டார்

(வேலணை)

விமானக் குண்டு வீச்சுக்குப் பயந்து பாதுகாப்புத் தேடிப் பற்றைக்குள் ஓடிய இளைஞர் ஒருவரை, பாம்பு தீண்டிய சம்பவம் சரவணையில் இடம் பெற்றுள்ளது.

பொன்னுத்துரை எபன் (16 வயது) என்னும் இளைஞரே கடந்த வாரம் சரவணையில் இடம்பெற்ற குண்டு வீச்சின் போது பாம்பினால் கடியுண்டவராவர்.

தீவிர சிகிச்சையின் பின்னர் இவர் தற்பொழுது சுகம் அடைந்து வருகிறார். (75-க)

# தி. மு. க. தொண்டர் கொலை

(சென்னை)

புதுச்சேரியில் நேற்று முன்தினம் இரவு தி.மு.க தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தையடுத்து சில குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. [பூ]

# கட்டாக்காலி மாடுகளின் குற்றப்பணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் நடவடிக்கையின் ஒரு கட்டமான கட்டாக்காலி மாடுகளின் குற்றப்பணத் தொகையை 50 ரூபாவில் இருந்து 250 ரூபாவாக தமிழீழ ஆய்வு நிறுவன பணியகம் நேற்று 16ம் திகதியிலிருந்து உயர்த்தியுள்ளது.

உற்பத்திக் குழுக்கள் மூலம் கிராமங்களில் கட்டாககாலியாகத் திரியும் கால்நடைகளையும் தோட்டங்கள், வயல்களில் பயிர்களை அழித்து நாசம் செய்யும் கால்நடைகளையும் பிடித்து அதன் உரிமையாளரிடம் இருந்து குற்றப்பணம் 50 ரூபாவும், பிடிகூலியாக 50 ரூபாவும், பராமரிப்பு கூலியாக 10 ரூபாவும் இதுவரை அறவிடப்பட்டு வந்தது. நேற்றிலிருந்து (16 - 04 - 91] மாடுகளுக்கான குற்றப்பணம் 250 ரூபாவாக அறவிடப்படும்.

ஆடுகளுக்கான குற்றப் பணமும் இருபத்தைந்து ரூபாவில் இருந்து 125ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆடுகளுக்கான பிடிகூலி 25 ரூபாவாகவும் பராமரிப்புக்கூலி 5 ரூபாவாகவும் தொடர்ந்து இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [109)

## இலங்கையிலிருந்து

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பல வழிகளிலும் தற்போது இறங்கியுள்ளதாகவும் இதற்கு இலங்கையர் பலர் பணத்துக்காக எதனையும் செய்வதாகவும் அந்த நிருபரின் கருத்து அமைந்துள்ளது.

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பொம்மையாக்கி அவரை கட்டுப்படுத்திவந்தவர் திரு. ராஜீவ். அக்காலத்தில் இலங்கை அரசுக்கு திரு. சந்திரசேகர் மூலம் ஒரு நெருக்கடியை கொடுத்திருக்கலாம்.

ஆனால் நேரு குடும்பத்தவரே சர்வதேச பிரச்சனையை அணுகவேண்டுமென்ற நோக்கிலேயே திரு. ராஜீவ் தன்னிச்சையாக செயற்பட்டு வருவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த காங்கிரஸ் பிரமுகர் தெரிவித்தார். (சி)

## முருங்கனில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையில் நேற்று முன்தினம் மட்டும் ஒரு சிப்பாய் பலியானார். நால்வர் படுகாயமடைந்தனர்.

## சிறையிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போவதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஜே வி. பி. என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்ட இளைஞர்களில் சிலர், பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் விடுதலைசெய்யப்படுகின்றனர்.

விடுதலைசெய்யப்பட்ட சில நாட்களில் அவர்கள் கடத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு விடுதலைசெய்யப்பட்டவர்களில் பலர், கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவஞ்சலிக் கிரியைகள்

(யாழ் பாணம்)

எதிர்பாராத விதமாகக் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் வீரமரணமடைந்த, விடுதலைப் புலிகளின் முழு நேர ஆதரவாளரான கிருஷ்ணபிள்ளை கைலைவாசன் (அற்புதன்) அவர்களின் 7ம் நாள் நினைவஞ்சலிக் கிரியைகள், இன்று அல்வாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (வி)

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் படுகொலைகளும், அட்டூழியங்களும், தமிழர் ஆயிரக்கணக்கில் காணமற் போவது குறித்தும் தற்போது உலகிற்கு பெருமளவு தெரிய வந்துள்ளது

கடந்த 9 மாதங்களில் மட்டக்களப்பில் மாத்திரம் 2000 தமிழ் இளைஞர்கள் காணமற் போயுள்ளனர். இந்த தகவல்கள் மனித உரிமை குழுக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை இதுவரை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

வடக்கு - கிழக்கில் 4,000 ற்கும் மேற்பட்ட தமிழர் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். திருமலையில் 'கறுப்புச் சட்டை' அணிந்தவர்களால் கைதாவோர் பின் காணமல் போகிறார்கள் அல்லது கொல்லப்பட்டு விடுகிறார்கள்.

தமிழர் வாழும் பகுதிகளில் பீப்பாக் குண்டுகள், பீப்பாக்களில் எரிதிரவம் நிரப்பிய குண்டுகள், மற்றும் வேறு விதமான குண்டுகள் போடப்படுகின்றன. இதற்கு அரசே பொறுப்பாகும்.

தமிழர்களை கொல்வதன் மூலம் இராணுவ நடவடிக்கையில் பெருமளவு முன்னேற்றம் காணப்படவில்லை

மட்டக்களப்பு, திருமலையில் காணமல் போவோர் பற்றியோ, மனித உரிமை மீறல் பற்றியோ தமிழர் எவரும் மூச்சு விடுவதில்லை. தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகள் கூட இதுபற்றி கதைப்பதில்லை அச்சம் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது (இ)

# சுங்க சட்டத்தில் மேலும் திருத்தம்

(கொழும்பு)

சுங்கச் சட்டத்தில் மேலும் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

இதன்படி சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்படும் பொருட்கள் சம்பந்தப்பட்ட நபரின் வழக்கு முடியும்வரை ஏலத்தில் விற்கப்பட மாட்டாது.

பழுதடையும் பொருட்களாயின் உடன் விற்கப்படும்.

அத்துடன் நபர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்தும் வரை வட்டியும் அறவிடப்படவுள்ளது. (பூ)

## நேர்முகப் பரீட்சை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பயிற்சி நெறிக்கான ஆட்களை தெரிவுசெய்யும் நேர்முகப்பரீட்சை இன்று 17-ம் திகதி காலை 10 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

கால்நடை சுகாதாரத் தகுதியுடையவர்வர்கள் கிராமிய உற்பத்திக்குழு பிரதேச இணைப்பாளர் ஊடாக இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும். [1.9]

## காணமல்போனோரை

1-ம் பக்கத் தொடர்ச்சி]

காணமல் போய்விட்டதாக 'மனித உரிமைகள் குழுக்கள்' கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## காரைநகர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாலை 3-00 மணி வரை மேற்படி கல்லூரியில் இந்த அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகக் காரைநகர் கொத்தணி அதிபர் திரு. அ. திருநீலகண்டசிவம் தெரிவித்துள்ளார். (சி)

## யுத்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கையில் நடைபெற்ற புத்தாண்டு வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமக்கோ அல்லது அரசுக்கோ யுத்தத்தில் நம்பிக்கையில்லை என்று கூறிய ஜனாதிபதி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சியை அரசாங்கம் கைவிடவில்லையென்றும் கூறினார்.

சமாதானம், ஐக்கியம் கலந்துரையாடல் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதையே அரசாங்கம் விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

## மர்மமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சரவணை கிழக்கில் இடம்பெற்ற இம் மரணச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த எஸ். தேவமலர் என்ற இளம் பெண்ணின் சடலமே நேற்றிரவு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டதாகும்.

சடலத்தின் கழுத்தில் சுருக்கிட்டிருப்பதற்குரிய ஆதாரங்கள் உள்ளதனால் கொலையா? தற்கொலையா? என்பதனை ஊர்ஜிதப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. [56]

# மரண அறிவித்தல்

## நயினாதீவு
## செல்லப்பா விசாகப்பெருமான்

நயினாதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபாலதிபர் செல்லப்பா விசாகப்பெருமான் அவர்கள் 13-4-91-ல் [சனிக்கிழமை] நயினாதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற பவானி விசாகப்பெருமான் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி கிருஷ்ணமணி கதிரேசு, Dr. இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr. கதிரேசு, திருமதி அம்பிகை இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சந்திரகாந்தா கதிரேசு அவர்களின் பெரிய தகப்பனாரும், பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற குற்றாலலிங்கம், திருமதிகள் மங்கையற்கரசி செல்லத்துரை, பார்ப்பதிதேவி ஐயாத்துரை, பெரியநாயகி பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சுமித்ரா பாஸ்கரன், பிரணகார்த்திகரன் கதிர்மணி, அநசுயா, சுமங்கலை, கிருஷ்ணமணி, சுரேஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும், மஷிதரனின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-4-91-ல் (ஞாயிற்றுக் கிழமை) நயினாதீவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: த. அருளானந்தன்

61 A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். [ஏ 1232]

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# நூற்றாண்டு விழா
நிறைவாக
# முன்னோர், மூத்தோரைக் கௌரவித்தல்

யாழ்ப்பாணம் இந்து சமூகம் தனது முன்னோர் மூத்தோரைக் கௌரவிக்க இனிய விழாவொன்றினை எடுக்கின்றது.

காலம்: 1991 - 04 - 20 சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

★ யாழ். இந்துவின் வெள்ளிவிழாக் கால சேவை நாயகர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.

★ நூற்றாண்டு காலத்துள் சேவையிலிருந்த அதிபர்களின் உருவ ஓவியங்களைத் திரைக்கம் செய்தல்.

யாழ். இந்துக்கல்லூரியின் வளர்ச்சியிலும், அதன் பெருமையிலும் அக்கறைகொண்டுள்ள ஒவ்வொருவரையும் இரு கரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

சுந்தரம் டிவகலாலா
கே. சிவராஜா
இணைச்செயலாளர்கள்

க. சி. குகதாசன் — அதிபர்
ஆ. இராஜகோபால் — செயலர், காலாசாரக் குழு

(ஏ 1233)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office S. Lanka under Number [illegible]